

# பனிமயம்

## ஆகஸ்டு 2025

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அன்பு மக்களே, வணக்கம்.

பார் போற்றும் பனிமயத் தாயின் 443ஆம் ஆண்டு பெருவிழா வாழ்த்துகளையும், ஆசிகளையும் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். கடவுள் நமக்குத் தந்திருக்கும் உன்னதமான கொடைதான் அன்னை கன்னிமரியா. முத்துமாநகருக்கு தரப்பட்டுள்ள வரப்பிரசாதம் தான் பார்போற்றும் பரிசுத்த பனிமயத் தாய்.

நம் தாயின் விழாவை ஜூலை மாதம் 25ஆம் தேதி கொடிப் பவனியோடு தொடங்கினோம். அன்னையின் விழாவைக் கொண்டாடுவதில் பிள்ளைகளுக்கு எவ்வளவு ஆர்வம், ஆனந்தம். நாட்கள் பலவாக பலவிதமான தயாரிப்புகளில் ஈடுபட்டிருந்தோம். ஆன்மீக தயாரிப்புகள், விழா சார்ந்த தயாரிப்புகள் என்று ஒவ்வொருவரும் நம்மால் முடிந்ததை இந்த அன்னைக்காக செய்தோம். திருவிழா நவநாள்களில் தினமும் மக்கள் அதிகாலையிலேயே அன்னையைத் தேடி சாரை சாரையாக வருவது நம் மனதை கொள்ளை கொள்கிறது, நம் விசுவாசத்தை தூண்டி எழுப்புகிறது. ஆலயத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒவ்வொரு வழிபாடும் அன்னையின் புகழ் பாடுகிறது.

உள்ளூரைச் சார்ந்த மக்கள் மட்டுமல்லாது வெளியூர்களிலிருந்தும் அன்னையின் பிள்ளைகள் வந்து செல்வதைப் பார்க்கும்போது நம் கண்களுக்கு வியப்பாய் உள்ளது. அன்னையின் பிள்ளைகளாகிய கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாது பிற சமயங்களைச் சார்ந்த அன்னையின் பிள்ளைகளும் நம் தாயைத் தேடி வருவதைப் பார்க்கும்போது நம் தாய் ஏழு கடல் துறைக்கு மட்டுமல்ல எல்லோர்க்கும் ஏக அடைக்கலத்தாய் என்பதை மெய்ப்பிக்கிறது. ஆகஸ்ட் மாதம் முழுவதுமே அன்னையின் ஆலயம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழியும். மக்களின் உள்ளங்களும் அருள் வெள்ளத்தால் நிரம்பி வழிய வாழ்த்துகிறேன்.

ஓ அன்னையே, அரசியே, அடைக்கலமே, தஸ்நேவிஸ் மாமரியே! உம் பிள்ளைகளைக் கண்ணோக்கிப் பாருமம்மா, உம் பிள்ளைகளின் மனக் கவலைகள் அனைத்தையும் தீருமம்மா என்று ஜெபித்து ஆசீர் வழங்குகிறேன்.

God Bless You All.



என்றும் பாசத்துடன்

**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை

உதயம் 26 தாரகை 12

நிர்வாகி & வெளியிடுபவர்
அருள்பணி. ஸ்டார்வின்
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

**பரிமாற்ற உடனுறைதலுக்காக...**

உடனுறையும் வாழ்வு மிகக் கடினமாகத் தோன்றும் சமூகங்கள் இன, அரசியல், சமய, கருத்தியல் மோதல் சோதனைகளுக்கு இணங்காதிருக்க நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. மரியன்னையின் திருப்பெயர்கள் . . . . . . . . . . . . . 4
அருள்பணி. குமார்ராஜா

2. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் . . . . . . . . 6
கலாபன் வாஸ்

3. தரிசனம் தருவாய் தாயே... . . . . . . . . . . . . . . . . 8
அருள்பணி. க.செ. பிரவீன் ராசு

4. எல்லோர்க்கும் ஏக அடைக்கலம் தூய பனிமய அன்னை. . . . . . . . . . . . . . . . . . 10
ரோஸ் சேவியர்

5. வளையல் கடை 'வள்ளி' . . . . . . . . . . . . 12
ஜோ. ரெஜினா கிரகோரி

6. விடுதலை அன்னையே!... எந்தன் முகவரி நீயே!.... . . . . . . . . . . . . . . . . . . 14
ஞான. ஜோஸப் ஜவஹர்

7. விவிலியப் போட்டி . . . . . . . . . . . . . . . . . . . . 15

8. பனிமயப் பகிர்வு. . . . . . . . . . . . . . . . . . . . . 18

# மரியன்னையின் திருப்பெயர்கள்

29

## விடியற்கால விண்மீன்!



மரியன்னையின் திருப்பெயர்களுள் தனித்துவமான, ஆனால் மிகவும் தொன்மையான ஒன்றுதான் விடியற்கால விண்மீன். அறிவியல் பார்வையில் வீனஸ் கோள் கதிரவனுக்கு முன்னதாக தோன்றி, அதன் வருகையை அறிவிக்கிறது. எனவே, அது விடியற்கால விண்மீன் என்று அழைக்கப்படுகிறது. (கதிரவன் மறைந்த பிறகு ஒளி வீசித் தோன்றுவதால் மாலை நேர விண்மீன் என்றும் பெயர்பெற்றுள்ளது).

திருஅவையின் மரபின்படி அன்னை மரியாவே விடியற்கால விண்மீன். காரணம், இயேசு என்னும் ஆதவன் கதிர் விரிப்பதற்குக் கட்டியம் கூறும் வண்ணம் அவருக்கு முன்பாக ஒளிவிடும் விண்மீனாகத் திகழ்கிறார் நம் அன்னை.

விவிலியத்தின் பார்வையில் நமக்கு ஒரு வியப்பு காத்திருக்கிறது. "தாவீதின் குலக்கொழுந்தும், வழித்தோன்றலும் நானே! ஒளி படைத்த விடிவெள்ளியும் நானே!" (திவெ 22:16) என்று இயேசுவே கூறும் இறைமொழியை திருவெளிப்பாடு நூலில் காண்கிறோம். ஆம், இயேசுவே நமது விடிவெள்ளி. எனவே, அன்னை மரியாவை எப்படி விடியற்கால விண்மீன் என அழைக்கலாம்? என்னும் கேள்வி நம்முள் எழுவது இயல்பே.

ஆனாலும், வேறொரு பார்வையில் இயேசுவைக் கதிரவனாக, சூரியனாகக் காட்டுகிறது திருவிவிலியம். இயேசுவே "உலகின் ஒளி நானே" (யோவா 8:12), நான் உலகில் இருக்கும்வரை நானே உலகின் ஒளி" (யோவா 9:5) என்று மொழிந்தார். இயேசுவைப் பற்றி இறைவாக்குரைத்த செக்கரியா விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகிறது" (லூக் 1:79) என்றார். எனவே, இயேசு கதிரவனாகவும், அவரது வருகையை முன்னறிவிக்கும் விடிவெள்ளியாக மரியாவும் திகழ்கின்றனர்.

மரியன்னையின் திருப்பெயர்களுக்கு விரிவாக விளக்கம் எழுதிய புனித ஜான் ஹென்றி நியூமன் விண்மீனைப் போலவே, மரியாவும் தானாக ஒளிர்வதில்லை, தனக்காகவும் ஒளிர்வதில்லை. எப்படி ஒரு விண்மீன் தன் ஒளிக்காகக் கதிரவனையே முற்றிலும் சார்ந்திருக்கிறதோ, அதுபோலவே மரியாவும் தம் திருமகனாம் இயேசு என்னும் கதிரவனிடமிருந்தே தமது ஒளியைப் பெறுகிறார். இயேசுவுக்காகவே அவர் சுடர் வீசுகிறார். இயேசுவின் பிரதிபலிப்பே மரியா. ஒரு விடிவெள்ளியாக மரியா இயேசுவையே மாட்சிப்படுத்துகிறார் என்கிறார்.

புனித நியூமனின் இன்னொரு ஒப்பீடு நம் கவனத்தை ஈர்க்கிறது. மரியன்னையின் பெயர்களிலெல்லாம் மிகவும் அழகு வாய்ந்தவை மறைபொருளின் ரோஜா மலர், விடியற்கால விண்மீன் என்று எழுதும் நியூமன், மண்ணில் முளைக்கும் ரோஜா வாடிவிடும், ஆனால், விண்ணில் முளைக்கும் விண்மீனோ ஒருபோதும் வாடாது என்று சொல்லி, விடியலின் விண்மீன் என்னும் பெயரே மிகவும் சிறப்பானது என்கிறார். ★

# நோயுற்றோரின் நலம்!

30



மரியன்னையின் திருப் பெயர்களுள் அனைவரையும் ஈர்க்கின்ற ஒன்று அவர் நோயுற்றோரின் நலம் என்பது. அன்னையை நாடும் அனைவரும் உடல் நோய்களினின்று மட்டுமல்ல, மனநோய்கள், அதிலும் மேலாக சோதனைகள், நம்பிக்கைக் குறைபாடு, பாவநாட்டங்கள் போன்ற ஆன்ம நோய்களினின்றும் விடுதலை பெறுகின்றனர் என்பதே காலங்காலமாக எண்ணற்றோரின் அனுபவம்.

இறைவன்தானே நலம் தருகிறார். மரியாவை எப்படி நோயுற்றோரின் நலம் என அழைக்கலாம்? என சிலர் கேள்வி எழுப்பலாம். ஆனால், இயேசுவே தம் சீடர்களுக்கு “தீய ஆவிகளை ஓட்டவும், நோய் நொடிகளைக் குணமாக்கவும் அதிகாரம் அளித்தார்” (மத் 10:1) என்கிறது விவிலியம். தொடக்கத் திருஅவையினர் “உமது தூய ஊழியர் இயேசுவின் பெயரால் உமது கையை நீட்டி நோயுற்றோருக்கு நலமளியும். அடையாளங்களும் அருஞ்செயல்களும் நடைபெறச் செய்யும்” (திப 4:30) என்று மன்றாடினர், இறையருளால் நோயுற்றோருக்கு நலம் தந்தனர்.

இயேசுவின் சீடர்களுக்கே நோய்களைப் போக்கும் ஆற்றல் இருந்தது என்றால், இயேசுவின் தாயான மரியாவுக்கு அந்தப் பேறு உண்டு என்பதில் ஐயமில்லையே! திருஅவையின் நெடிய வரலாற்றில் மரியன்னையை நாடி நலம் பெற்றவர்கள் கோடான கோடிப்பேர் என்பதே உண்மை. எல்லா மரியன்னைத் திருத்தலங்களையும் நாடி எண்ணிலடங்காத மக்கள் திருப்பயணம் செல்வதற்குக் காரணம் மரியா நோயுற்றோருக்கு நலம் தருவதே.

உடல், உள்ள, ஆன்ம நோயால் அவதியுற்ற 18 வயது இளைஞர் சேல்ஸ் மரியன்னையை நோக்கி மன்றாடியதால் முழு நலம் பெற்று, புனித பிரான்சிஸ் சலேசியாராக மாறினார். யூத மதத்தைச் சேர்ந்த அல்போன்ஸ் ரேட்டிஸ்போன் (Marie-Alphonse Ratisbonne 1814-1884) அன்னையைக் காட்சியில் கண்டு, கத்தோலிக்கராக மாறினார். பின்னர் இயேசு சபைக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு, யூதர்களைத் திருமறையில் சேர்க்க ஒரு துறவற சபையையே தோற்றுவித்தார்.

இத்தகைய அனுபவங்கள் ஏராளம் நம் முன்னே காணப்படுகின்றன. எனவேதான், நமது நாட்டிலும் வேளாங்கன்னி, பூண்டி, தூத்துக்குடி பனிமய அன்னைப் பேராலயம் போன்ற மரியன்னைத் திருத்தலங்களுக்கு ஆண்டு முழுவதும் எண்ணிலடங்காத் திருப்பயணிகள் திரண்டு வருகின்றனர். ஆம், நம் அன்னையை நோயுற்றோரின் நலமே என்று வாழ்த்துவது பொருத்தமானதே.



அருள்பணி. குமார்ராஜா

# இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்



### இயேசுவின் தாய் அன்னை மரியா

"ஒரு பெண்ணால் சாவு வந்ததுபோல், மற்றொரு பெண்ணால் வாழ்வு வரவேண்டும் என்பதற்காக, கிறிஸ்து மனிதர் ஆவதற்கு முன்பே, அவருடைய தாயாக முன்னியமிக்கப் பட்டவரின் இசைவு பெற வேண்டும் என்று இரக்கம் நிறை தந்தை ஆவல் கொண்டார். அனைத்திற்கும் புத்துயிர் அளிக்கும் வாழ்வானவரையே உலகிற்கு ஈந்தவரும், இத்தகைய மாபெரும் நிலைக்குரிய கொடைகளால் கடவுளால் அணிசெய்யப் பெற்றவருமான இயேசுவின் அன்னையிடத்தில் இந்த ஆவல் சிறந்த முறையில் நிறைவேறுகின்றது. எனவே, இறை அன்னை முற்றிலும் தூயவர், பாவக்கறை எதுவுமில்லாதவர், தூய ஆவியினால் புதிய படைப்பாக உருவாக்கப் பெற்றவர் என்று அவரை அழைக்கும் வழக்கம் திருத்தந்தையரிடத்தில் நிலவியிருந்ததில் வியப்பொன்றுமில்லை. கருவான முதல் நொடியிலிருந்தே தனிச் சிறப்பான தூய்மையின் மாட்சியால் அணி செய்யப் பட்டிருந்த நாசரேத்துக் கன்னியை, கடவுளின் ஆணையால் தூது சொல்ல வந்த வானதூதர், "அருள்மிகப் பெற்றவரே" (காண் : லூக் 1:28) என்று வாழ்த்துகின்றார். இக்கன்னியும், "நான் ஆண்டவரின் அடிமை; உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38) என மறுமொழி கூறுகின்றார். இவ்வாறு ஆதாமின் மகளான மரியா கடவுள் வாக்குக்கு இசைவு அளித்ததால் இயேசுவின் தாயானார்" - திருச்சபை - எண். 56.

### இயேசுவின் பொதுவாழ்விலே மரியா

"இயேசுவின் பொது வாழ்வில் அவருடைய தாய் குறிப்பிடத்தக்க முறையில் தோன்றுகின்றார். கலிலேயாவிலுள்ள கானாவில் திருமண விருந்தில் மெசியாவாகிய இயேசுவிடம் இரக்கத்தோடு பரிந்துரைத்து, அவர் தம் முதல் அருள் அடையாளத்தைச் செய்யுமாறு (காண் : யோவா 2:1-11) தூண்டும் வேளையில் முதன்முறையாக மரியா தோன்றுகிறார். உடல் இரத்த உறவுகளையும் அவற்றில்

பிணைப்புகளையும் கடந்ததே தமது ஆட்சி என்று கூறி, தம் அன்னை நம்பிக்கையோடு செய்து வந்ததுபோல் (காண் : லூக் 2:19ம், 51ம்) இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் பேறுபெற்றவர் எனக் கிறிஸ்து பறைசாற்றியபோது (காண் மாற்கு 3:35, லூக் 11:27-28), இவ்வார்த்தைகளை அவர் ஏற்றுக்கொண்டார். இவ்வாறு தூய கன்னியும் நம்பிக்கைத் திருப்பயணத்தில் முன்னேறிச் சென்றார்; தம் மகனோடு கொண்ட ஒன்றிப்பைச் சிலுவை வரை விடாது காத்து வந்தார்; கடவுளின் திட்டத்திற்கேற்பச் சிலுவையின் அருகே நின்றார் (காண் : யோவா 19:25); தம் ஒரே மகனோடு கடுமையாகத் துன்புற்றார்; தாயுள்ளத்தோடு தன்னையே அவரது பலியுடன் இணைத்தார்; தான் பெற்றெடுத்த மகனைப் பலியிடவும் அன்புடன் இசைந்தார். இறுதியாக, "அம்மா, இவரே உம் மகன்" (காண் : யோவா 19:20-27) என்னும் சொற்களால் சிலுவையிலே உயிர்விட்ட அதே கிறிஸ்து இயேசுவே மரியாவைத் தம் சீடருக்குத் தாயாக அளித்தார்" - திருச்சபை - எண்.58.

### திருச்சபையில் தூய கன்னிக்கு வணக்கம்

திருச்சபை மரியாவைத் தனிப்பட்டதொரு வணக்கத்தால் தக்க காரணத்துடன் பெருமைப்படுத்துகிறது. ஏனெனில், தம் மகனுக்குப் பிறகு எல்லா வானதூதர்களுக்கும் மனிதர்களுக்கும் மேலாகக் கடவுளின் அருளால் உயர்த்தப்பட்டவரும் கிறிஸ்துவின் மறைநிகழ்ச்சிகளில் பங்கெடுத்தவருமாகிய இவர் கடவுளின் தூய்மைமிகு தாய் ஆவார். தூய கன்னியை தொடக்கமுதலே, நம்பிக்கை கொண்டோர் **"கடவுளின் தாய்"** என்றழைத்து வணங்கினர். தங்கள் துன்பங்கள், தேவைகள் அனைத்திலும் அவரை மன்றாடி, அவரது அடைக்கலத்தில் புகலிடம் அடைந்திருக்கின்றனர். குறிப்பாக, எபேசுத் திருச்சங்கத்திற்குப் பிறகு, வியத்தகு முறையில் கடவுளின் மக்கள் மரியாவை அதிகமதிகம் வணங்கவும் அன்பு செய்யவும் உதவிக்கழைக்கவும் கண்டுபாவிக்கவும் முற்பட்டனர். "அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" (லூக் 1:48) என்று அவரே முன்மொழிந்ததற்கு ஏற்ப, இது நிறைவேறியது. திருச்சபையில் என்றும் இருந்துள்ள இவ்வணக்கம் உண்மையிலேயே தனிப்பட்டது, மனிதரான வாக்குக்கும் தந்தைக்கும் தூய ஆவியாருக்கும் நாம் அளிக்கும் ஆராதனையிலிருந்து உள்ளியல்பிலேயே இது வேறுபட்டது. இந்த ஆராதனையை இவ்வணக்கம் மிகச் சிறந்த விதமாய் ஊக்குவிக்கும் எனலாம்" - திருச்சபை - எண் 66.

"பிற கிறிஸ்தவ சகோதரர் சகோதரிகளாவது வேறு எவராவது திருச்சபையின் உண்மைக் கோட்பாட்டைப் பற்றித் தவறாக எண்ண இடந்தரக்கூடிய எச்சொல்லையும் செயலையும் அவர்கள் கவனமாய்த் தவிர்ப்பார்களாக. கிறிஸ்தவ மக்கள் மனத்திலிருத்த வேண்டியதாவது: மெய்யான இறைப்பற்று பொருளற்றதும், தோன்றி மறைவதுமான உணர்ச்சிகளிலோ பயனற்ற குருட்டு நம்பிக்கையிலோ அடங்குவதில்லை; மாறாக, உண்மையான நம்பிக்கையிலிருந்தே பிறக்கிறது. இந்நம்பிக்கை இறை அன்னையின் மேன்மையை ஏற்றுக் கொள்ளச் செய்கிறது. பிள்ளைகள் என்ற நிலையில் நாம் நம் தாயிடம் அன்பு கொள்ளவும் அவருடைய நற்பண்புகளைக் கண்டு பாவிக்கவும் வேண்டுமென்ற ஆர்வத்தையும் அது நம்மில் தூண்டுகிறது" - திருச்சபை - எண் 67.

*தொகுத்தளிப்பவர் :* **கலாபன் வாஸ்**

# மரியன்னை காட்சிகள் பற்றிய தொடர்

1

## தரிசனம் தருவாய் தாயே...



அது 1926ஆம் ஆண்டு. தன் தந்தையின் இறப்பைத் தொடர்ந்து, தன் நான்கு சகோதரிகளுடன் லூர்து நகருக்குத் திருப்பயணமாகச் செல்கின்றார் மருத்துவராகப் படித்துக் கொண்டிருந்த பத்தொன்பது வயது இளைஞர் ஒருவர். தான் லூர்து நகரில் இருந்த போது பெற்ற ஒரு வித்தியாசமான அனுபவத்தை அவர் இவ்வாறு பதிவு செய்கின்றார்: "லூர்து நகரில் நான் மூன்று மாதங்கள் தங்கியிருந்தேன். ஒரு மருத்துவ மாணவனாக, லூர்து நகரில் நடைபெறுவதாகச் சொல்லப்பட்ட புதுமைகளை ஆய்வு செய்கின்ற அலுவலகத்தின் பணிகளைக் கவனிக்க அனுமதி பெற்றேன். கன்னி மரியாவிடம் மன்றாடிக் கொண்டிருந்த எண்ணற்ற இறைமக்கள் முன்னிலையில் நடைபெற்ற மூன்று புதுமைகளையும், அவற்றை ஆய்வு செய்த கடவுள் நம்பிக்கை இல்லாத மருத்துவர்களின் ஆய்வு முடிவுகளையும் கண்டு வியந்துபோனேன். ஏற்கெனவே மாத்ரித் நகரில் கடவுள் நம்பிக்கையற்ற என் மருத்துவப் பேராசிரியர்கள் லூர்துநகர் மூட நம்பிக்கைகள் பற்றிப் பேசியுள்ளதை நினைத்துப் பார்த்தேன். வியப்பின் உச்சத்தில், எளிமையும் வல்லமையும் ஒருசேரக் கொண்டிருந்த கன்னிமரியாவின் திருப்பாதத்தில், திருப்பயணிகளின் செபச் சத்தத்திற்கும், காவ் நதியின் இனிய முனகல்களுக்கும் இடையில் என் அழைத்தலை நான் உணர்ந்தேன்".

உடனடியாக அந்த இளைஞர் தன் மருத்துவப் படிப்பைக் கைவிட்டார். 1927ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 15ஆம் நாள் இயேசு சபையில் சேர்ந்தார். பின்னாளில் அருள்பணியாளராக மாறியது மட்டுமன்றி, இயேசு சபையின் தலைவராகவும் 18 ஆண்டுகள் பணியாற்றினார். இன்று அவர் ஓர் இறைஊழியர், அவரது புனிதர் பட்டத்திற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவரது பெயர் பேதுரு அருப்பே. ஜான் கிளவுட் டியட்ஸ் என்னும் இயேசு சபை அருள்பணியாளருக்கு அவர் நேர்காணலாகத் தந்து, பின்னர் "ஓர் இயேசு சபைக்காரரின் ஆன்மீகப் பயணம்" என்ற பெயரில் வெளியிடப்பட்ட தன்வரலாற்று நூலில் அவர் பதிவு செய்துள்ள செய்திகள் தான் நாம் மேலே பார்த்தவை.

இன்றும் லூர்து நகரில் மரியன்னை காட்சி தந்த இடத்தில் நடைபெறும் புதுமைகள் எண்ணிலடங்காதவை. லூர்து நகரில் மட்டுமல்ல, குவாதலூப்பே, பாத்திமா, வேளாங்கண்ணி என மரியன்னை காட்சி தந்த எல்லா இடங்களிலுமே இத்தகைய புதுமைகள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. இதைப் பார்க்கும் எல்லாருக்கும், மரியன்னை காட்சிகளுக்கு அவ்வளவு ஆற்றல் உண்டா என்ற கேள்வி நிச்சயம் எழும். அந்தக் கேள்விக்கான விடையை, அந்தக்

கேள்விக்குத் தொடக்கப் புள்ளியாக அமைந்த மரியன்னையின் காட்சிகளைத் தான் நாம் இப்பகுதியில் காண இருக்கின்றோம்.

மரியன்னை காட்சிகள் என்பவை அன்னை மரியா தன் விண்ணக மாட்சியினின்று இறங்கி வந்து மண்ணகத்திலுள்ள தம் மக்களைச் சந்திக்கும் நிகழ்வுகளே. உலகில் வாழும் தம் பிள்ளைகளுக்காய் தாம் இறைவனிடம் தொடர்ந்து மன்றாடுவதை நமக்கு உணர்த்தும் நேரங்களே இவை. வரலாறு முழுக்க உலகின் பல இடங்களில் பல மனிதர்கள் மரியன்னை காட்சிகளைக் கண்டுள்ளனர். இவர்களுள் பலர் பின்னாளில் புனிதர்களாகவும் உயர்த்தப் பெற்றுள்ளனர். உலகின் பல இடங்களிலுமிருந்து இத்தகைய காட்சிகளை மனிதர்கள் பெற்று வருகின்றனர். அதேவேளையில் ஒருசிலர் தங்கள் பக்தியின் மிகுதியினால் ஏற்படும் ஒருவித பரவச உணர்வு நிலையினாலோ, அல்லது பிறரை ஏமாற்றுவதற்காகவோ, இவ்வாறு காட்சி கண்டதாகப் போலியாகக் காட்டிக்கொண்ட நிகழ்வுகளும் நடந்துள்ளன. இதனால் திருஅவை மரியன்னை காட்சிகளை மிகுந்த கவனத்தோடும் எச்சரிக்கை உணர்வோடுமே அணுகி வருகின்றது. இதனால் எல்லாக் காட்சிகளும் திருஅவையின் அங்கீகாரத்தையும் ஒப்புதலையும் பெற்றவை என்று சொல்லிவிட முடியாது.

1545 முதல் 1563 வரையிலான காலக்கட்டத்தில் நடந்த திரிதெந்துப் பொதுச்சங்கத்திலேயே மரியன்னை காட்சிகளை அங்கீகரிப்பதற்கான ஒழுங்குமுறைகளை வகுக்கும் முயற்சி தொடங்கிவிட்டது. அதுவரை நடைபெற்ற காட்சிகளும், அதற்குப் பின்னர் நடைபெறப் போகும் காட்சிகளும் உரியமுறையில் ஆய்வு செய்யப்பட்டு, அதன்பிறகே அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதே திருஅவையின் நிலைப்பாடு. பொதுவாக, திருஅவையில் காட்சிகளுக்கான அங்கீகாரம் இரண்டு வகைகளில் வழங்கப்படுகின்றன. ஒருசில காட்சிகள் கத்தோலிக்கத் திருஅவையின் தலைமைப் பீடமான வத்திக்கானின் ஒப்புதலைப் பெற்றுள்ளன. இன்னும் சில காட்சிகள் அவை நடைபெற்ற இடங்களின் தல ஆயர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் எது முக்கியத்துவம் வாய்ந்த காட்சி, எது முக்கியத்துவம் இல்லாத காட்சி என்ற விவாதங்களுக்குள் திருஅவை ஒருபோதும் போவதில்லை. வத்திக்கானின் ஒப்புதலைப் பெற்றதாலேயே சில காட்சிகள் முக்கியமானவை என்றோ, அல்லது வெறுமனே தலஆயர்களின் ஒப்புதலை மட்டும் பெற்றிருப்பதால் சிலகாட்சிகள் முக்கியமில்லாதவை என்றோ சொல்வதற்கில்லை. எனினும், வத்திக்கானின் ஒப்புதலைப் பெறும் காட்சிகள் உலகெங்கும் பரவியுள்ள எல்லாக் கத்தோலிக்கர்களுக்கும் அறிமுகமானவையாக மாறுகின்றன என்பது மட்டும் உண்மை. இதுவரை நடைபெற்றுள்ள பல்வேறு காட்சிகளுள் வெறும் பதினாறு காட்சிகள் மட்டுமே இத்தகைய வத்திக்கான் தலைமைப்பீட அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன என்பது ஒரு வியப்பூட்டும் உண்மை.

அவ்வாறு வத்திக்கான தலைமைப் பீட ஒப்புதலைப் பெற்ற காட்சிகள் எவை? அவற்றோடு சேர்த்து மரியன்னையின் மற்ற காட்சிகளின் வரலாறு என்ன? இக்காட்சிகள் நமக்குத் தரும் பாடங்கள் என்ன? என்பதையெல்லாம் இத்தொடரில் நாம் விரிவாகக் காணலாம். காத்திருங்கள், அடுத்த இதழ் வரை.

தொடரும்



**அருள்பணி. க.செ. பிரவீன் ராசு**

# எல்லோர்க்கும் ஏக அடைக்கலம்



# தூய பனிமய அன்னை

அடைக்கலம் என்றால் பாதுகாப்பு என்று பொருள். முத்துக்குளித்துறை(தூத்துக்குடி)யில் பனிமய அன்னையாக பேராலயத்தில் குடிகொண்டிருக்கும் அன்னை மரியா, தம்மிடம் அடைக்கலம் தேடி வரும் மக்களின் மலை போன்ற துன்ப, துயரங்களை பனி போல் நீக்கும் அருள் பெற்றவர்,

**"பண்ணிய பாவமெல்லாம்**
**பரிதிமுன் பனியே போலே**
**நண்ணிய நின்முன் இங்கு**
**நசித்திடல் வேண்டும், அம்மா!"** என்ற முண்டாசுக் கவிஞர் பாரதியின் பாடலுக்கேற்ப அடைக்கலம் தேடி வரும் மக்களின் பாவங்களுக்காக இறைமகனிடம் பரிந்து பேசி,, மனநிறைவு நோக்கி வழி நடத்தி செல்பவள், பனிமய அன்னை, திருஅவையின் தாய்.

பனிமய அன்னையின் திருச்சுரூபம் மக்கள் அனைவரையும் பரவசப்படுத்தும் இறையருள் கொண்டது.

**"பொன்முடியில் பன்னிரு விண்மீன்கள் ஒளி வீச**
**பொற்பாதத்தில் வெண்ணிலவு காட்சி தர**
**பொன்னுடலில் பொன்னாடை புனைந்து**
**செந்தாமரைக் கரத்தில் செந்நிற மாதுளம்பழம் ஒன்றிருக்க**
**பாலன் இயேசு இடக்கரத்தில் அமர்ந்திருக்க"**

பனிமய அன்னையின் திருச்சுரூபம் போர்த்துக்கீசிய மன்னன் 3ஆம் ஜான் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த அகுஸ்தீன் சபை கன்னியர்களுக்கு பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவிற்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட சுரூபம். இஸ்பானிய நாட்டின் மரத்தால் உருவாக்கப்பட்டது. புனித சவேரியாரின் வேண்டுகோளை நிறைவு செய்ய அன்னையின் திருச்சுரூபம் 1555ஆம் ஆண்டு சந்தலேனா என்ற கப்பல் மூலம் ஜூன் 9ஆம் நாள் வந்து சேர்ந்தது.

விவிலியத்தில் விடுதலைப் பயணத்தின்போது இஸ்ரயேல் மக்கள், பழிவாங்குவோரிடமிருந்து பாதுகாப்பு பெற சில அடைக்கல நகர்களை

ஆண்டவர் தேர்ந்தெடுத்து அளித்தார் (இச 19, யோசு 20, எண்35) முத்துக்குளித்துறை பரதகுல மக்கள், டச்சு அதிகாரிகளாலும், முஸ்லீம், நாயக்கர் மன்னர்களாலும் துன்புறுத்தப்பட்டபோது ராஜா தீவையும் (முயல் தீவு) தூத்துக்குடிக்கு வடக்கேயுள்ள சில கிராமங்களையும் அடைக்கல நகர்களாக பனிமய அன்னை மக்களுக்கு தேர்ந்தெடுத்துக் கொடுத்தார். அந்நகர்களிலும் பனிமய அன்னை சில புதுமைகள் செய்து கொண்டிருந்தார். இறுதியில் பனிமய அன்னை தூத்துக்குடியில் பனிமய அன்னை ஆலயத்தில் எழுந்தருளினார்.

**“கடல்வளை ஏழுத்துறை அடைக்கல தாயென!**
**கலைவல்லோர் வாழ்த்தும் பரதவர்மாதாவே!”**

– பண்டித் ரூபி வர்மா.

ஏழு கடல்துறை என்று அழைக்கப்பட்ட ஊர்கள் வேம்பாறு, வைப்பாறு, தூத்துக்குடி, புன்னக்காயல், வீரபாண்டியன்பட்டினம், ஆலந்தலை, மணப்பாடு. இன்று அன்னையின் அழகு வதனத்தை கண்டு தங்கள் மனதில் உள்ள குறைகளை, அவரது பாதத்தில் வைத்து செபிக்கும்போது மன ஆறுதலையும், மனநிறைவையும் பெற்று செல்லும் மக்கள் ஏராளம். “மிகவும் இரக்கமுள்ள தாயே” என்ற செபம் புனித பெர்நெத்துக்கு அன்னை கற்றுக் கொடுத்தது. அதில் “உம்மிடம் அடைக்கலமாய் ஓடி வந்தேன்” என்ற வரி மனதை உருக்கக்கூடியதாக உள்ளது.. திருத்தந்தை 9ஆம் பத்திநாதர், “இச்செபத்தை சொல்பவர்களுக்கு பரிபூரண பலன் உண்டு” என்று அறிவித்து உள்ளார். புனித பிரிஜ்ஜெட், மரியா, விண்ணரசி மட்டுமல்ல. இரக்கமுள்ள கருணை நிறைந்தவள். பாவிகளைக் கூட்டிச் செல்லும் விண்ணக வாயில், அடைக்கலம் தேடி வரும் மக்களுக்காக பரிந்து பேசுபவள் என்கிறார்.

**“தேவனருள் பெற்றவளாய் மரியாள் நின்றாள்**
**திருமகனைப் பெறுமுன்னே சிறப்பைப் பெற்றாள்**
**காவலிலே தேவனருள் பெற்றாரெல்லாம்**
**கருணையுடை மானிடராய்த் திகழ்வாரன்றோ!”**

*-இயேசு காவியத்தில் கவிஞர் கண்ணதாசன்*

பனிமய அன்னையைத் தரிசிக்க, காலையில் பள்ளி, கல்லூரி, தொழிலுக்குச் செல்பவர்களும், சாதி, மத வேறுபாடின்றி அனைத்து மக்களும் வருகிறார்கள் என்றால் நல்லதே நடக்கும் என்று அந்த தாய் மீது வைத்த நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் அன்றோ?

திருத்தந்தை லிபேரியுஸ் அவர்களால் இத்தாலி நாட்டில் ரோம் நகரில் மேரி மேஜர் பனிமய அன்னை ஆலயம் (352-366) மந்திரித்து அர்ச்சிக்கப்பட்டது. அன்னைக்கு முதன்முதலாகக் கட்டப்பட்ட ஆலயம். அங்கு ஆகஸ்ட் 5ஆம் நாள் திருவிழா கொண்டாடப்பட்டது. அதே நாள் தூத்துக்குடியிலும் திருவிழா கொண்டாடப் படுகிறது. திருவிழா நாட்களிலும் அதன் பின்னரும் பிற மதத்தினரும், அன்னையின் பக்தர்கள் அனைவரும் அலைஅலையாக வருவதைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கும்.

“கடவுள் பற்று உள்ளவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பெண்களுக்கு ஏற்ற அணிகலன்கள் நற்செயல்களே” (திமொ 2:10)

அன்னையைப் போன்று நல்ல எண்ணங்களை மனதில் நிறுத்தி, பிறரோடு அன்போடு பழகி, மற்றவர்களுக்கு உதவிக் கரம் நீட்டி, அன்னையின் அன்பைப் பெறுவோம். அன்னையின் திருவிழாவை எதிர் நோக்கியிருக்கும் நாம், நம் உள்ள உணர்வுகளை, எண்ணங்களை இறை அனுபவத்திற்குட்படுத்தி, இறை வார்த்தையை வாசித்து, நம் வாழ்வில் அழகு சேர்ப்போமாக!



**ரோஸ் சேவியர்**



# வளையல் கடை ‘வள்ளி’



“வா தாயி! பொண்ணுக்கு வளையல் வாங்கிப் போடு. நிறைமாசப் பொண்ணு வெறுங்கையா இருக்கக் கூடாது. ‘வளைகாப்பு’ நடத்தலையா?” மாதா கோவிலுக்கு மகளுடன் வந்து கொண்டிருந்த நளினியிடம், கோவிலருகே வளையல் கடை வைத்திருந்த வள்ளி தோழமையுடன் கேட்டாள்.

“இல்லம்மா, நாங்க மாதாவின் பிள்ளைகள். வளைகாப்பு சம்பிரதாயம் எல்லாம் செய்ற வழக்கம் இல்லம்மா” பணிவுடன் பதிலளித்தாள் நளினி. மகள் ஷீபா சோர்வுடன் சிரித்தாள்.

“ஏன் தாயி அப்பிடி சொல்லிப்புட்ட. இது சாஸ்திரம் சம்பிரதாயம் இல்ல தாயி. கண்ணாடி வளையல்களோட ‘கலகல’வென சப்தம் கேட்டா வயிற்றுப்புள்ள சந்தோஷமா துள்ளும்மா. இப்ப எல்லோரும்தான் போடுறாங்க. வா கண்ணு, நான் உனக்குப் போடறேன்” அவள் அனுமதி கேட்காமலே ஷீபாவின் இரு கரங்களையும் வளையல்களால் நிறைத்தாள் வள்ளி.

ஷீபா கைகளைக் குலுக்கி அதன் ஓசையில் மனம் மகிழ்ந்தாள். நளினி வள்ளியின் கையில் ரூ. 500ஐத் திணித்துவிட்டு கோயிலுக்குச் சென்றாள். கடையில் வள்ளியின் பக்கத்தில் அமர்ந்திருந்த வள்ளியின் மகள் ‘சுப்பு’ ஏக்கத்துடன் ஷீபாவைப் பார்த்து பெருமூச்சுவிட்டாள். நளினியும் ஷீபாவும் அன்றிலிருந்து மாதா கோயிலுக்கு வரும்போதெல்லாம் வள்ளியின் கடையை சந்திப்பது வழக்கம் ஆகிவிட்டது.

அன்று கடைக்கு வரும்போது, “வள்ளி! ஏன் உன் மக ஒரே இடத்துல உட்கார்ந்திருக்கா. நீ ஓடியாடி வேல செய்ற. வயசுப் பிள்ளையை உட்கார வைச்சிருக்கிற...” வள்ளியின் கண்களிலிருந்து உருண்டோடிய கண்ணீர் நளினியின் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

“அம்மா, எம் பொண்ணு சுப்பு, ஓடியாடி வேலை செய்தவதான். ஹூம்... கல்யாணம் பேசி முடிச்சு வச்சிருந்தேன். யாரு கண்ணு பட்டுச்சோ, புள்ள, மொட்ட மாடியிலே துணி காயப்போட போனவ, கால் தவறி விழுந்துட்டா. உடம்புல ஒரு காயமுமில்லை. சாமி புண்ணியத்துல உயிர் தப்பிட்டு. அப்படியே வேகமா கீழ உட்கார்ந்துட்டா. நரம்புல என்ன பிரச்சனையோ, கால் நடக்க முடியாமப் போயிட்டு. எவ்வளவோ காசு செலவழிச்சு எத்தனையோ மருத்துவர்கிட்ட கூட்டிட்டுப் போனேன்... ம்ஹூம்.... குணமாகலை. வாழ்க்கையே போச்சு. இவளுக்குப் பேசி வச்ச பையன் இவள் வேண்டாம்னு போயிட்டான். இனி இப்படியே என்கூட இருந்து குப்பகொட்ட

வேண்டியதுதான். அவளுக்கு இனி ஏது வாழ்க்கை...” அழுதாள் வள்ளி.

“என்ன வள்ளி, பனிமய மாதா கோயில் பக்கத்தில கடை போட்டுட்டு நம்பிக்கை இல்லாமல் பேசுறியே. ஷீபாவுக்கு கல்யாணமாகி பத்து வருஷமா குழந்தை இல்ல. மாதாகிட்ட நம்பிக்கையோடு மன்றாடினோம். மாதாவோட உதவியாலதான் இப்ப என் மக, குழந்தையை சுமந்து கொண்டிருக்கா....” உணர்ச்சிவசப்பட்டாள் நளினி.

அட போம்மா. அந்த மாதா, மகமாயி நீங்க கேட்டா தருவாக. நாங்க மாரியாத்தாவக் கும்புடறோம். எங்களுக்கு எப்படித் தருவாக?” அலுத்துக்கொண்டாள் வள்ளி.

“வள்ளி! என்ன பேச்சு பேசற. **பனிமய மாதா எல்லோருக்கும் ஏக அடைக்கலத்தாய்.** நீயும் அவுங்க பிள்ளதான். அவுங்ககிட்ட மன்றாடிக் கேட்கிற. எல்லோருடைய மன்றாட்டையும் யேசுகிட்ட சொல்லி வாங்கித் தருவாங்க. அவங்க யேசுவுடைய அம்மா. அவுங்க வாழும்போது, கருவை சுமந்திருந்த எலிசபெத்தம்மாளுக்கு உதவி செய்ய பல மைல்கள் ஓடிச் சென்றாங்க. கானாவூர்ன்னு ஒரு ஊர்ல கல்யாணத்துல திராட்சை இரசம் குறைபட்டுட்டு, மாதா, யேசுகிட்ட சொன்னாங்க. உடனே இயேசு தண்ணீரை இரசமா மாத்திட்டாரு. மாதாகிட்ட நீ கேட்காமலே தருவாங்க. இருந்தாலும் நம்பிக்கையோடு கேளு” அறிவுரை கூறிவிட்டுச் சென்றாள் நளினி. அடுத்த நாள் நளினியும், ஷீபாவும் இவள் கடைக்கு வரும்போது வள்ளி கடையில் இல்லை.

“அம்மா, மெழுகு திரி பொருத்தி, பூமால போட்டு மாதாகிட்ட வேண்டுதல் பண்ணப் போயிருக்காங்க” விளக்கினாள் சுப்பு. அவள் பேசிக் கொண்டிருக்கும்போது ஷீபா கடைக்குள் நுழைந்து தன் குதிகால்களை உயர்த்தி, மேல் தட்டிலுள்ள வளையல்களை எடுக்க முயன்றாள்.

“அக்கா, உங்களுக்கு அந்த வளையல் வேணுமா? எனக்கு மேல ஏற முடியாது. அம்மா இப்ப வந்துருவாங்க. கொஞ்சம் பொறுங்கம்மா” என்ற சுப்புவிடம், “இல்ல சுப்பு, நான் உயரமாத்தான் இருக்கிறேன். எட்டி எடுத்துருவேன்” என்று கால்களைத் தூக்கி எடுக்க முயன்றபோது வளையல் தட்டு அவள் மேல் விழப் போக, “ஐயோ அக்கா!” என்று கத்திக்கொண்டே சுப்பு எழுந்து வளையல் தட்டைத் தாங்கிப் பிடிக்க, மறுபக்கம் இழுத்த வேகத்தில் ஷீபா கீழே விழுந்தாள். பிரசவ வேதனை வந்துவிட்டது... துடித்தாள். அதற்குள் வள்ளி வரவே, எல்லோரும் மருத்துவமனைக்கு ஷீபாவை அழைத்துச் சென்றனர்.

அழகான பெண் குழந்தை பிறந்தது. தாயும், சேயும் நலமாக இருப்பதை அறிந்த பிறகுதான் இயல்பு நிலைக்கு வந்தார்கள் நளினியும் வள்ளியும். அப்போதுதான் தங்களுடன் சுப்புவும் தானே நடந்து வந்திருந்ததைப் பார்த்தார்கள். வியப்பால் வாயைப் பிளந்தார்கள். ஷீபாவைக் காப்பாற்ற வேண்டும் என்ற வேகம், சுப்புவின் நரம்புப் பிணைப்புகளைக் கட்டவிழ்த்துவிட்டது.

“சுப்பு, என் மவளே!” என அவளைக் கட்டிப்பிடித்து அழுதாள் வள்ளி. “அம்மா! மாதா மகமாயி, அந்த பனிமயத்தாய் என் மவளை நடக்க வைச்சிட்டா. எல்லோருக்கும் அடைக்கலம்னு காட்டிட்டா” என கூறிக் கொண்டே பனிமயத்தாயின் ஆலயத்தை நோக்கி ஓடினாள் ‘வளையல் கடை வள்ளி’.



**ஜோ. ரெஜினா கிரகோரி**



# விடுதலை அன்னையே!..
# எந்தன் முகவரி நீயே!..



விடுதலைப் பயணியர் விடியலின் விண்மீனே!..
விமலியே!.. விதியினை மாற்றிய அருளதுநெறியே!..
அடுத்தவர் துயரை தனதெனக் கொண்ட
அருள்நிறை மரியே!.. அமல உற்பவியே!..
ஆள்பவர் மனங்களில் அன்பினை விதைத்து
ஆள்பவள் நீயே!..விண்மண் முழுமையே!..
அலைகடல் முழுமையும் புதுமைகள் புரிந்தாய்..
வேல்விழிச் சுடரால் அவர்க்கருள் சுரந்தாய்..

மூவொரு இறைவன் தேர்ந்தவள் நீயே!..
மூடிய அறைக்குள் வாடிய சீடரின்
தாயென நின்றாய்!..தரணியை வென்றாய்..
சேயாம் இயேசுவின் உடனுறை மீட்பே!..
இறைநெறி உலகினில் தோன்றிய நாள்முதல்
இதுவரை எவரையும் கைவிடா கருணையே!..
மறையே!..மறையதுவரியே!..முகவரிநீயே!..
மனிதம் காக்க மன்பதைகாக்க விடியலே வருக.

ஞான. ஜோஸப் ஜவஹர்

# விவிலியப் போட்டி 124

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**எஸ்தர் (கிரேக்கம்) அதிகாரம் 1 முதல் 10 வரை**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**சரியா, தவறா எனக் குறிப்பிடுக.**

1. மாசற்ற ஓரினம் அழிக்கப்படுகிறது.
2. நூற்று இருபத்தேழு மாநிலங்கள்மீது அர்த்தக்சஸ்தா தன் ஆட்சி செலுத்தி வந்தார்.
3. துன்பத்தில் துடித்த எஸ்தர் அரசி ஆண்டவரிடம் அடைக்கலம் புகுந்தார்.
4. நான் இறக்க வேண்டியிருந்தாலும் சரியே என்றவர் மொர்தெக்காய்.
5. இன்று எனக்கு ஒரு பொன்னாள் என்று கூறியவர் எஸ்தர்.
6. கடவுள் மன்னரின் மனத்தை மாற்றி கனிவு கொள்ளச் செய்தார்.
7. மன்னரும் ஆமானும் அரசியோடு விருந்துக்குச் சென்றார்கள்.
8. துயர நாள் நன்னாள்களாக மாறியது.
9. பூரிம் என்பது எபிரேயம்.
10. எனது நாடு என்பது இஸ்ரயேலாகும்.

## விவிலியப் போட்டி 123

**ஜூலை 2025** விடைக்குறிப்புகள்

**யூதித்து நூல் அதிகாரம் 9 முதல் 16 வரை**

| | | |
|---|---|---|
| 1. | அறுசுவை உணவு, திராட்சை மது | 12:1 |
| 2. | ஓலோபெரின் | 11:23 |
| 3. | யூதித்து | 9:1 |
| 4. | மூன்று நாள் | 12:7 |
| 5. | முப்பது நாளாக | 15:11 |
| 6. | மூன்று மாதம் | 16:20 |
| 7. | மனாசே | 16:22 |
| 8. | பெத்தூலியா | 16:23 |
| 9. | நூற்றைந்து | 16:23 |
| 10. | ஏழு நாள் | 16:24 |

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.08.2025**

## உங்கள் கவனத்துக்கு

பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு யார் மூலமாவது கொடுத்து விடுங்கள். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பெயர் எழுதப்படாத விடைத்தாள்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

**63831 98510** (வாட்ஸ் அப் மட்டும்) அலைபேசி என் மாற்றத்தைக் கவனியுங்கள்.

இந்த எண்ணுக்கு வரும் விடைகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படும். பழைய எண்ணுக்கு அனுப்பப்படும் விடைகள் நிராகரிக்கப்படும்.

**வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.**

*குறிப்பு : ஒரே கையெழுத்தில் இரண்டு மூன்று பதில் தாள்கள் அனுப்பி இருந்தால் வேறு வேறு பெயர்களில் இருந்தாலும் அவற்றில் ஒன்று மட்டுமே வெற்றி பெற்றதாக எடுத்துக் கொள்ளப்படும். இச்செயலைத் தவிர்க்கவும்*

**சரியான விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 215**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 124**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. அந்தோனியார் அன்பியம் — **ரீனா மொறாயிஸ்**
2. அன்னை தெரசா அன்பியம் — **செல்வ ராணி**
3. அன்னை வேளாங்கன்னி அன்பியம் — **கவாஷினி ஆல்வின்**
4. கிறிஸ்தரசர் அன்பியம் — **லூரட் வசந்த்**

## பாராட்டுக்குரியவர்கள் : 120

**அந்தோனியார்**
5. சரோஜா
6. ஜெயா
7. பிருந்தா
8. ஜெசி
9. லூக்காஸ் சகாயம்
10. லீனா

**அன்னை தெரசா**
11. ஜான்சி ராணி
12. ஜூலியட்ஸ் ரூபி
13. சாந்தி அந்தோணி சந்தியாகு
14. ரெய்ஸா சுஜய்

**அன்னை வேளாங்கன்னி**
15. டென்சி லோபோ
16. மிஷல் மிரல்
17. ஆரோன் ஷாரோன்
18. ஜெஸிந்தா

**கிறிஸ்தரசர்**
19. செலஸ்கி கிளமென்ட்
20. ரெக்ஸ் கிரீன்வெல்
21. ஜூலியட் சாவியோ

**தஸ்நேவிஸ் மாதா**
22. அஸ்கேனியஸ் அந்தோணிசாமி
23. ராஜா ஐரின்
24. இசிதோர்
25. டாரல் தீத்தோனிஸ்
26. சுரேஷ் பிரேமா
27. சுகன் மோனிஷா

**திவ்ய பாலன்**
28. பிரின்சி
29. சகாயராணி தனராஜ்
30. ஸ்டார்லக் ஏஞ்சலின்
31. சென்சிலா சகாயராஜ்

**பாத்திமா மாதா**
32. ரீனா ராஜா
33. சுகந்தா ஸ்டெனி
34. பிச்சம்மாள்
35. அனு ஆல்வின்
36. ஜெனிட்டா மைக்கேல்

**இரக்கத்தின் மாதா**
37. பாப்டிஸ்டா
38. இருதயம்மாள் கொன்சால்
39. சகாயராணி
40. சேவியர் அம்மாள் கோமஸ்
41. செல்வி புரோ
42. பிரைட்டன் ஜெரோபின்
43. சித்ரா மோத்தா

**ஜெபமாலை மாதா**
44. கல்யாணி செல்வராஜ்
45. சகாயம்மாள் பெனடிக்ட்

**ஜூடு**
46. டிரைபேனா
47. கிறிஸ்டோ ஜெபினா
48. டெரன்சியா அரிஸ்டோ

**காவல் தூதர்**
49. சாந்தி ஆல்ட்ரின்
50. ஜோ ட்ரினிஷா
51. பிரிசில்லா
52. வெனிட்டாள்
53. ரஸ்கின் வசந்தா
54. ஜூலியஸ் தல்மேதா
55. எலிஜா இம்மானுவேல்
56. சார்லட் பிராங்
57. ஜெயா அகஸ்டின்

**குழந்தை தெரசா**
58. பெர்லி டென்சன்
59. பெனி மொறாயிஸ்
60. கிறிஸ்டி லிஸ்டன்

**குழந்தை இயேசு**
61. பிரான்சிஸ் வாஸ்
62. மோனிகா செபஸ்டின்
63. எமல்டா

**மணல் மாதா**
64. ரொசாரி கோமஸ்
65. கெயிட்டன் பர்னான்டோ
66. வெர்ஜினியா

**லூர்து மாதா**
67. சாண்டினா
68. ஆலிவர் வி. ராயன்
69. ஜெனோ சேவியர்
70. ரோஸ்லின் தாமஸ்
71. பிலோ
72. ரஜூலா ஜான்போஸ்கோ

**மிக்கேல் அதிதூதர்**
73. ஜோஸ்பின்
74. ஷீபா
75. வினோ அந்தோணி

**பனிமயம்**
76. சுரேஷ் ஆனி
77. ஜாக்குலின் வினோதினி
78. ராணி
79. ஜூடு ரதி
80. அந்தோணிசாமி
81. சகாயராஜா சகாயராணி

**பவுலடியார்**
82. லீமா ரோஸ் ஜாய்
83. ராஜா ரோஸ்லின்
84. ஒபிலியா தாமஸ்
85. ஹெலினா

**பரிபூரண மாதா**
86. சப்னா கினிஸ்டன்

**பொம்பெய் மாதா**
87. இம்மாக்குலேட் சதீஷ்
88. டிஃபானி அண்டோ
89. லூடா கான்ஸ்டன்
90. அண்டோ எல்ஃபி
91. லெரின்ஸ் ரொட்ரிகோ
92. பெலிக்ஸ் சோபியா
93. ரியானா
94. மேத்யூ கர்டோசா
95. ஜான்சிராணி அமல்ராஜ்

**இராயப்பர்**
96. போஸ்கோ ரெனோ
97. டெய்ஸி
98. ஆக்னல் டாஃப்னி
99. ரொமில்டா வெனான்சியுஸ்

**சவேரியார்**
100. ஜான்சி ஜெயக்குமார்
101. டெலிலா அமலன்
102. அனுஷியா பீட்டர்
103. ஜோர்னல் ஜென்ஸி
104. வினிஸ்டா ஷெலின்

**செபஸ்தியார்**
105. பிரவீனா
106. ஜெஸிலா சேவியர்
107. அந்தோனியம்மாள் டென்சிங்

**சிந்தாத்திரை மாதா**
108. நேசம்
109. ஜூடி ஆரோக்கியராஜ்
110. டோனஸ் ராயன்
111. லாசர் செல்வி

**சிறுமலர்**
112. விஜி சகாயராஜ்
113. எல்சிட்டா ஆனந்தன்
114. விஜிலியா
115. செலஸ்டின்

**சூசையப்பர்**
116. கிறிஸ் ரீஜோ
117. ஹேமலதா
118. மோனிஷா
119. மென்சி
120. ஜென்னி பர்னான்டோ
121. ஜாக்குலின் பர்னான்டோ

**திருச்சிலுவை**
122. ஜஸ்டின் ஸ்நோ குளோரி

**வியாகுலமாதா**
123. லூர்து லினட்
124. மதியா

## பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 91

### பரிசு பெறுபவர்கள் : 4

| | | |
|---|---|---|
| 125. | சென்னை | **கமலஜோதி ஜெயசீலன்** |
| 126. | திருச்சி | **மேத்யூ விவேக்** |
| 127. | திரு இருதயங்களின் பேராலயம் | **பீட்டர் ஜெயந்தி** |
| 128. | குரூஸ்புரம் | **பௌவுசி ஜோ மைக்கேல்** |

### பாராட்டுக்குரியவர்கள் : 86

**சென்னை**
129. ரெஜினா கிரகோரி
130. டெனிசா கிளாட்
131. ஜோதி ஜெரால்டு
132. பிரேமா குணசீலன்
133. மேமா ஸ்டீபன்
134. செர்லி

**கொடைக்கானல்**
135. ஜெஸிந்தா மார்ட்டின்

**மதுரை**
136. ஜெஸிந்தா மேரி
137. சகோ. ஜான்ஸி மேரி

**திருச்சி**
138. டோனி

**ஆறுமுகநேரி**
139. ஜெயராணி
140. தொம்மை அந்தோணி

**வீரபாண்டியன் பட்டணம்**
141. ரேச்சல் ராயன்

**ஆலந்தலை**
142. தங்கராஜ் பொன்சேகா
143. மரியம்மாள்

**உவரி**
144. ஆர்லின் ஈவ்லின்

**உடன்குடி**
145. ஸ்னோவின்

**தருவைக்குளம்**
146. லில்லி சோபியா
147. மைக்கேல் ஸ்டிபானி

**தேனி**
148. கரோலின் பிலவேந்திரன்
149. அடைக்கலமேரி சூர்யா அன்பு
150. ரொசாரியோ மேரி ஈவ்லின்
151. குழந்தை தெரஸ்

**புதியம்புத்தூர்**
152. ஹெலன் அன்னமனி

**கடலூர்**
153. ஹென்றி தாஸ்

**கோயம்புத்தூர்**
154. சத்யா சேவியர்

**கயத்தார்**
155. அமல்ராஜ்

**ஏரல்**
156. ஜாய்ஸ் ரெத்னம்

**சிவகாசி**
157. ஜெர்லின்

**இரம்மதபுரம்**
158. மிக்கேல் அம்மாள்

**சங்கரன்கோவில்**
159. செல்வமேரி

**திண்டுக்கல்**
160. ரோசாலி
161. ஜெர்மேன்

**வேலூர்**
162. ஜாக்குலின் சிலுவை

**சோமனூர்**
163. ராஜேந்திர அருள்

**பேட்டை**
164. ஹேலனிட்டா

**புன்னைக்காயல்**
165. ஜோஸ்னா

<u>தூத்துக்குடி நகரப் பங்குகள்</u>

**திரு இருதயங்களின் பேராலயம்**
166. கிரேட்டா ராஜா
167. ரிமோல்டா
168. ரமோலா கமிலஸ்
169. பிரின்ஸி ரமோலா
170. டீனுராய் ஜேசுபாலு

**குரூஸ்புரம்**
171. பிளாசி செல்வராஜன்
172. ஜான்சி மென்டிஸ்
173. ஆசிர்வாதம்
174. மாசில்லா

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
175. சுகிர்தா
176. டார்லிமா அமுதன்
177. மோட்சராணி
178. சகாயம்

**அன்னை வேளாங்கன்னி கோயில்**
179. செக்கரியா சாமுவேல்
180. லிஜியா

**யூதா ததேயு கோயில்**
181. சகாய மேரி
182. ஆரோக்கிய சர்மிளா
183. ஜூடி ரீத்தம்மாள் மேரி
184. ரோஸ் சேவியர்
185. ஜெனட் சேவியர்
186. ஷெர்லி
187. லூர்து சுவிதா
188. சகாயராஜ் ரொட்ரிக்ஸ்

**அந்தோணியார் கோயில்**
189. மகேஷ் சுஜாதா
190. மென்சிலா லொயோலா
191. டயானா வினோத்;
192. ராஜேஷ் கண்ணா
193. ரீடன்

**காந்திநகர்**
194. பின்டன் சோஃபியா
195. ரமேஷ் நர்மதா
196. அன்சிட்டா
197. ரியாலினோ
198. பேபி வால்ட்டர்
199. ஹெலனிட்டா

**பாத்திமா நகர்**
200. ஷர்மிளா ரமேஷ்
201. மேரி ஹம்லின்

**சார்லஸ் கோயில்**
202. சகாயிட்டா மச்சாது
203. அல்போன்சா பர்னாண்டோ

**அண்ணாநகர்**
204. வென்சி ராணி
205. ஹெலன் ஜான் கென்னடி

**புனித இஞ்ஞாசியார் கோயில்**
206. சகோ. மரிய சூசை ரூபி
207. சகோ. ரூபெல்லா மேரி
208. பாத்திமா ஏஞ்சலின்
209. சூசை நெவின்

**இரத்னபுரம் சவேரியார் கோயில்**
210. வெர்ஜின்
211. தயாபர ராணி

**திரேஸ்புரம்**
212. கோல்பின் ஜேசுராஜ்
213. அபின்சா
214. ஸ்நோ வெண்பா
215. கிருபா



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 192**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 215**

# பனிமயப் பகிர்வு

## (பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 14)

## ஆகஸ்ட் - 2025

| | | |
|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | **அருள்பணி. ஸ்டார்வின்** |
| உதவிப் பங்குத் தந்தை | : | **அருள்பணி. பிரவீன் ராசு** |
| களப் பணியாளர் | : | **சகோ. மிக்கேல் அருள்ராஜ்** |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை **5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை **9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை **5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | செபமாலை நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை **6.30** | செபமாலை, நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** *சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00*

*மற்ற நாட்களில் எந்நேரமும் பங்குத்தந்தையரை அணுகலாம்.*

- ✓ *திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)*

- ✓ *புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).*
- ✓ *புதுநன்மை அருள்சாதனம் பெற விரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.*

- ✓ *திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00 மணிக்கு அனுமதி உண்டு. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.*
- ✓ *ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30*
- ✓ *அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்*

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : *காலை 10.00 மணி - 01.00 மணி*<br>*மாலை 04.00 மணி - 05.30 மணி*
- ✓ *இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.*
- ✓ *நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.*

# பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

1. திருச்சிலுவைச் சிற்றாலயத்தில் பீடம் பழுது பார்க்கும் பணி ஜூலை மாதம் தொடங்கப்பட்;டது.
2. பனிமயத் தாயின் 443ஆம் ஆண்டுப் பெருவிழாவுக்கான அழைப்பிதழ்கள் ஜூலை 02ஆம் தேதி முதல் மக்களுக்கு வழங்கப்பட்;டன.
3. பேராலயத்தின் 443ஆவது பெருவிழாவைக் கொண்டாடுவது தொடர்பாக 07.07.2025 திங்கள்கிழமை அன்று மாலை 07.00 மணிக்கு நடந்த பொதுக்குழு கூட்டத்தில் பேரவை உறுப்பினர்களின் முன்னிலையில் கருத்துகள் கேட்கப்பட்டன.
4. 13.07.2025 ஞாயிறு பரிசுத்த பனிமய அன்னையின் இவ்வாண்டுத் திருவிழாவில் “பனிமய நேரலை” பல்சுவை நிகழ்ச்சியில் ஒளிபரப்பு செய்வதற்காக நகரப் பள்ளிகளின் மாணவ மாணியருக்கான கலைத்திறன் போட்டிகள் நடத்தப்பட்டன. மரியன்னை மாறுவேடப் போட்டி, ஓவியப் போட்டி, பேச்சுப் போட்டி, குழு நடனப் போட்டி ஆகிய நால்வகைப் போட்டிகளில் பதின்மூன்று பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர்.
5. நமது பங்கின் பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினர் தங்களின் திருவிழாவை 20.07.2025 ஞாயிறு இரண்டாம் திருப்பலியில் கொண்டாடினர். புதிய பொறுப்பாளர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர்.
6. 20.07.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணி திருப்பலியை பனிமய மாதா சபையினர் தங்கள் ஆண்டு விழாவாக சிறப்பித்தார்கள். திருப்பலி நிறைவில் புதிய உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டார்கள்.
7. 20.07.2025 ஞாயிறு மாலையில் “பனிமய நேரலை” பல்சுவை நிகழ்ச்சிக்காக, நகரப் பங்குகளின் பாடகர் குழுவினரது பாடல்கள் பதிவு செய்யப்பட்டன.
8. நமது பேராலயத்தின் வடபகுதியில் குருசுபத்தியிலிருந்து நற்கருணை சிற்றாலயம் வரையிலும் கல் தளம் (Paver Block) அமைக்கப்பட்டுள்ளது.
9. பெருவிழா ஆயத்தமாக 25.07.2025 வெள்ளிக்கிழமை மாலை 06.00 மணிக்குக் கொடிப் பவனி, நகரின் தெருக்களில் வலம் வந்து பேராலயம் வந்தடைந்தது. ஏராளமான இறைமக்கள் காணிக்கைகள் ஏந்தி வந்தனர்.
10. திருவிழா அறிக்கைகள் 20.07.2025 அன்று எல்லா திருப்பலிகளிலும் பாடப்பட்டு ஆலய மணிகள் ஒலிக்கப்பட்டன.
11. திருவிழா தொடர்பாக பத்திரிகையாளர்களுக்கான பேட்டி 21.07.2025 அன்று மாலை 05.00 மணிக்குக் கொடுக்கப்பட்டது.

# பங்கில் நிகழ்ந்தவை



## *வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்குப் பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 33. | ஆன்டனி தியோ | ஜெபஸ்டன் - சௌமியா | 01.06.2025 | லூர்து மாதா |
| 34. | இன்பென்ட் ஜியானா | தீபக் மோத்தா - ரேஷ்மா | 06.07.2025 | பொம்பெய் மாதா |
| 35. | ஸ்நோ ஹேனா | ஆக்னல் - திவ்வியா | 13.07.2025 | அன்னை தெரசா |
| 36. | நிகுல் அர்லோ | ஜான் பிரிட்டோ - நிவியா | 13.07.2025 | காவல் தூதர் |
| 37. | அனனியேல் ஸ்டன்ஷிக் | ஆஷிக் சித்து - ஸ்டானி ராஃபியா | 20.07.2025 | ஜெபமாலை |



## *வாழ்த்துகின்றோம்*

### 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 49. | ஸ்னோஸ் ஆரோன் | பெலிங்டன் - திவ்யா | 05.07.2025 | அன்னை வேளாங்கன்னி |
| 50. | ஷாரோன் | பெலிங்டன் - திவ்யா | 05.07.2025 | அன்னை வேளாங்கன்னி |



## *ஆசி கூறுகின்றோம்*

### 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 38. | ஆரோக்கிய ஜெரால்ட் ஜாய்சன் - வலன்டினா | தஸ்நேவிஸ் மாதா | 08.06.2025 |
| 39. | அஸ்வந்த் - நிமித் சித்ரா | மிக்கேல் அதிதூதர் | 16.06.2025 |



## *செபிக்கின்றோம்*

### 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 47. | தனராஜ் | சகாயராணி | 05.07.2025 | திவ்யபாலன் |
| 48. | ஜோபாய் பர்னான்டோ | சகாயராணி | 21.07.2025 | பாத்திமா மாதா |

# நடைபெறவிருப்பவை

★ 08.08.2025 தலைவெள்ளிக்கிழமை அன்று காலையும், மாலையும் நோயாளர்கள், முதியோருக்கு இல்லங்களில் நற்கருணை வழங்கப்படும்.

## பெருவிழா தொடர்பான அறிவிப்புகள்

**1. தெருக்களை ஆயத்தப்படுத்துதல்**

★ பின்வரும் நாள்களில் பவனி நடைபெற இருக்கிற தெருக்களை சுத்தமாகவும், போதிய வெளிச்சமாகவும் வைத்து கொள்ளவும்.

25-07-2025 வெள்ளி - கொடிப் பவனி
03-08-2025 ஞாயிறு - திவ்விய நற்கருணைப் பவனி
05-08-2025 செவ்வாய் - சப்பரப் பவனி

★ கட்டடப்பணிகள் நடைபெற்றால், கட்டுமானப் பொருள்களை அகற்றவும்;.

**2. அலுவலகப் பணிகள் :** பெருவிழா நாள்களில் பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள் வழங்கப்பட மாட்டாது. வழக்கமான அலுவலகப் பணிகளுக்காக பங்குத்தந்தையரையோ, பங்கு அலுவலகத்தையோ அணுக வேண்டாம்.

**3. நேர்ச்சைப் பால் வழங்குபவர்கள் :** பெருவிழா நாள்களில் நேர்ச்சைப் பால் வழங்குபவர்கள் கொடிமர வளாகத்தில் மட்டுமே வழங்க கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

**4. பிளாஸ்டிக் தடைக்கு ஒத்துழைப்பு :** தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து பனிமய அன்னைப் பெருவிழாவை “பிளாஸ்டிக் இல்லாத விழாவாக” கொண்டாட முன் வருவோம். எனவே, பிளாஸ்டிக் குவளைகள், பிளாஸ்டிக் பைகள், ஸ்ட்ரா, பிளாஸ்டிக் குடிதண்ணீர் பாட்டில் ஆகியவை பேராலய வளாகத்திற்குள் தடை செய்யப்படுகின்றன. அனைவரும் ஒத்துழைப்பு தாருங்கள்.

**5. பிறமத பக்தர்களுக்கு வரவேற்பு :** பெருவிழா நாள்களில் பனிமய அன்னையைத் தரிசிக்க வருகின்ற பிற சபை, பிற சமயங்களைச் சேர்ந்த சகோதர, சகோதரிகளை வரவேற்று அவர்களுக்கு ஒத்துழைப்பும், முன்னுரிமையும் கொடுத்து, “பனிமயத்தாய் எல்லாருக்கும் தாய்” என்பதை எண்பிப்போமாக!

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும் வழங்கப்படுகின்றது. வரும் நாள்களில் **அன்பு உணவு** வழங்க விரும்புவோர் பங்கு அலுவலகத்தில் முன்பதிவு செய்யவும்.

❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசீர், திருப்பலி நடைபெறும்.

| எண். | நாள் | செய்தித் தலைப்பு |
|---|---|---|
| | 05.08.2025 | **பனிமய அன்னையின் பெருவிழா** |
| 52. | 12.08.2025 | துன்பம் தாங்கும் அன்பு |
| 53. | 19.08.2025 | நன்மையே செய்யும் அன்பு |
| 54. | 26.08.2025 | அநீதியை எதிர்க்கும் அன்பு |

# நினைவு அஞ்சலி

"நீதிமான்கள் கடவுளின் கையில் உள்ளனர்"

(ஞானாகமம் 3:1)



**இரண்டாம் ஆண்டு**

## A.சரோஜா பர்னாந்து

தோற்றம் 31.12.1947 | மறைவு 30.08.2023



**9ஆம் ஆண்டு**

## P. அந்தோணி பிச்சை பர்னாண்டோ

தோற்றம் 17.01.1937 | மறைவு 28.05.2016



**30ஆம் ஆண்டு**

## Rev. Sr. மேரி சோபியா பாரா T.F.B.C.

தோற்றம் 19.03.1934 | மறைவு 06.05.1995

பிரிவால் வருந்தும்

குடும்பத்தினர்

மகள், மருமகன், பேரன்கள்

## இறைவனில் இணைந்த
## 25ஆம் ஆண்டு நினைவு



தாயின் மடியில்
14.08.1960

இறைவனின் மடியில்
04.08.2000

# D. செல்டன் பர்னாந்து

இப்பூமியில் வாழ்ந்தபோது எங்களை அன்பால் அரவணைத்து
வருவோரை ஆதரித்து அளவின்றி அன்பை அள்ளிக் கொடுத்து
அனைவரின் மனதிலும் நீங்காத இடம்பிடித்து
நினையாத நேரத்தில் எம்மை மீளா துயரில் ஆழ்த்திவிட்டு
சென்றாலும் உம் நினைவுகள் மட்டும் என்றும் நீங்காது.

பாசமுடன் நினைவுகூரும்

அன்பு மனைவி : தெரஸிட்டா
மகள்கள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள்

# 75வது பிறந்த நாள் நினைவு

விண்ணில் வாழும் என் இதயத்திற்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்



மண்ணில்
06.08.1950

விண்ணில்
18.02.2023

# S. ஜோபாய் மச்சாது

**வயது : 75**

உன் தாயின் கருவறையில்
நீ வளர்ந்தாய்
என் மன கருவறையில்
நீ மலர்ந்தாய்

பாசத்தோடு நினைவுகூரும்

**S. நட்சத்திரம்**

22, குருசடி சந்து, தூத்துக்குடி - 1,

## விண்ணக வாழ்வின்
# இருபதாம் ஆண்டு நிறைவு



பிறப்பு
15.09.1924

இறப்பு
24.08.2005

# A. லூர்தம்மாள் பர்னாந்து

வயது : 81

இறைவா!
இவ்வான்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியும்
முடிவில்லா ஒளியும் அளித்தருளும்!

நினைவில் வாழும்

மகன், மருமக்கள், பேத்திகள், பேரன்கள், பூட்டன்கள்



# விண்ணக வாழ்வின்
# பதினைந்தாம் ஆண்டு நிறைவு

"நீரே என் புகலிடம் நீரே என் அரண்" (சங். 90:2)



# J. தார்ஸிஸ் பர்னாந்து

பிறப்பு 18.10.1941

இறப்பு 08.08.2010

**அன்பினை அள்ளித் தந்தாய்
பாசத்தை எங்களுடன் பகிர்ந்தாய்
புன்னகை சிரிப்புடன் வாழ்ந்த -நீர்
அமைதியாய் சென்றது ஏன்?.......**

ஐந்து திருக்காயங்கள் கொண்ட அருட்சகோதரி ரோஸி (கார்மேல் மடம்) அவர்கள் கைப்பட எழுதிய செபம்
பெரிய வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இயேசுவின் 33 வருட வாழ்க்கையை தியானித்து 33 முறை சொல்ல வேண்டிய செபம்

ஓ! என் அன்பு ஆண்டவராகிய இயேசுவே! என் மகிமையின் அரசரே, உமது மிகவும் விலைமதிக்கப்படாத திருஇரத்தத்தைக் குறித்தும், உமது இரக்கம் நிறைந்த திருஇருதயத்தின் வழியாகவும், உமது மிகவும் கொடூரமான மரணத்தைக் குறித்தும் தற்போது நான் உம்மிடம் மிகப் பணிவுடன் மன்றாடிக் கேட்கும், இம்மிகவும் அத்தியாவசியமான விண்ணப்பத்தை எனக்கு அளித்தருள வேண்டுமென மன்றாடுகிறேன். - ஆமென்.

குறிப்பு : உங்களின் ஒரு முக்கிய கருத்துக்காக நம்பிக்கையுடன் மன்றாடினால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

ஓ! உன்னத இயேசுவின் திருக்காயங்களே, ஓ! உன்னத இயேசுவின் திருஇரத்தமே! ஓ! உன்னத இயேசுவின் நாமமே, ஓ! உன்னத இயேசுவின் வார்த்தையே, இருள், மருள் தீய சக்திகள் அனைத்திலிருந்தும் விடுவித்து என்னைக் காத்தருளும். (5 முறை சொல்லவும்)

ஓ! வியாகுலத்தாயே உம்முடைய கண்ணீரும் உம்முடைய திருமகனின் செந்நீரும் தோய்ந்த போர்வையினால் என்னைப் போர்த்திக் காத்து, எனக்காகப் பரிந்து பேசும் தேவ அன்னையே. - ஆமென். (5 முறை சொல்லவும்)

பிரிவால் துயருறும்

**தா. மேபில், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்.**

# 2ம் ஆண்டு நினைவு அஞ்சலி

## உந்தன் அன்பிற்கு ஈடில்லை!



உலகில் மனிதராக பிறந்த எம்மை
உயரிய மனிதர்களாகவே வளர்த்தவள்
ஊட்டிய சோற்றில்
உணர்வுகளையும் ஊட்டியவள்!
எம்மை கண்களில் வைத்து காத்தவள்
தனக்கென பாராமல்
எங்களுக்காய் வாழ்ந்தவள்!
வளர்பிறையாய் நாங்கள் வளர்ந்தோம்!
தேய்பிறையாய் நீ தேய்ந்தாய்!
உன்னை பிரிந்த நாள் முதல் இன்று வரை
உன் அன்பிற்கு இணை யாருமில்லை!
உன் பாசத்திற்கு ஏங்கும்
எங்களது ஏக்கங்கள் உணர முடியாத வலியாய்
எம்மைக் கொல்கிறது!
உன்னுடன் வாழ்ந்த அந்த
பொக்கிஷமான நாட்கள் மீண்டும் வேண்டுமென
எங்களது மனம் துடிக்கிறது!

அம்மா உங்கள் அன்பை யாராலும் தரமுடியவில்லையே!

# பிலோ சோரீஸ்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16.04.1955 | 01.08.2023 |

அன்புக் கணவர் : பயஸ் சோரீஸ்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார் உறவினர்கள்

27A, கிரகோப் தெரு, தூத்துக்குடி - 1.

தூத்துக்குடி

# பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்

ஏழு கடல் துறையோடு எல்லோருக்கும் ஏக அடைக்கலத்தாய்

## திவ்விய சந்த மரிய தஸ்நேவிஸ் மாதாவின்

## 443ஆம் ஆண்டு பெருவிழா நிகழ்வுகள் 2025







25.07.2025 வெள்ளி
**சிறப்பு கொடிப் பவனி**

26.07.2025 சனி
**கூட்டுத் திருப்பலி,
கொடியேற்றம்,
அன்னைக்குப் பொன்மகுடம் சூட்டுதல்**

03.08.2025 ஞாயிறு
**புதுநன்மைத் திருப்பலி,
திவ்விய நற்கருணைப் பவனி**

04.08.2025 திங்கள்
**மேதகு ஆயர் தலைமையில்
பெருவிழா மாலை ஆராதனை**

### 05.08.2025 செவ்வாய் அன்னையின் பெருவிழா

| | |
|---|---|
| காலை 04.30 மணி : | முதல் திருப்பலி |
| காலை 05.30 மணி : | 2ஆம் திருப்பலி |
| காலை 07.30 மணி : | பெருவிழாத் திருப்பலி<br>மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை |
| காலை 09.00 மணி : | 4ஆம் திருப்பலி<br>பேருள்தந்தை ரவிபாலன் |
| காலை 10.00 மணி : | 5ஆம் திருப்பலி<br>மேதகு ஆயர் இவோன் அம்புரோஸ் |
| நண்பகல் 12.00 மணி : | 6ஆம் திருப்பலி<br>மண்ணின் மைந்தர்கள் |
| மாலை 05.00 மணி : | பெருவிழா நிறைவுத் திருப்பலி |
| இரவு 07.00 மணி : | பரிசுத்த பனிமயத் தாயின் திருவுருவப் பவனி |
| இரவு 10.00 மணி : | பரிசுத்த பனிமயத் தாய்க்கு குடும்பங்களை ஒப்புக்கொடுத்தல் |

### நவநாள்களில்...

காலை 04.30 மணி
செபமாலை
தொடர்ந்து திருப்பலிகள்

மாலை 03.00 மணி
தேர்ஸ்
செபமாலை, மறையுரை
அருளிக்க ஆசீர்

இரவு 07.15 மணி
செபமாலை, பிரார்த்தனை
திவ்விய நற்கருணை ஆசீர்

அன்னையின் பிள்ளைகள் அனைவரையும் அன்புடன் அழைக்கும்...

அருள்பணி. ஸ்டார்வின், அதிபர், பங்குத்தந்தை
அருள்பணி. பிரவீன் ராசு, உதவிப் பங்குத்தந்தை
அருள்சகோ. மிக்கேல் அருள்ராஜ், களப் பணியாளர்

பங்கு மேய்ப்புப் பணிக்குழுவினர்
துறவியர், பக்த சபையினர்
இறைமக்கள்

SHINY Ph : 98421 31493